# குற்றவியல் விசாரணைக்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

1. நீங்கள் எவைபற்றி அறிந்திருக்க வேண்டும்?

2. இது ஒரு தகவல் இதழ்

3. இதனைப் பதிவிறக்கம் செய்ய முடியும்

4. இதைப் பிரதி எடுக்கலாம்

5. பிறருக்கு அனுப்ப முடியும்

ஒரு நிறுவனத்தில் திருட்டு, போதைப்பொருள் பிரச்சனை, உடற்காயம், சேதாரம் ஏற்படுத்துதல், உடைத்துக் களவெடுத்தல், அனுமதியற்ற ஊர்வலம் நடத்துதல், மதுபோதையில் வாகனம் ஓட்டுதல், விளையாட்டுமைதானத்தில் குழப்பத்தை ஏற்படுத்துதல், இதுபோன்ற பிரச்சனைகள் வரும்போது உங்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்படுவார்கள். அதற்கு அவர்களுக்கு உதவியாக காவற்துறை, அரசசட்டத்தரணி போன்ற நல்ல அமைப்புகள் உள்ளன. நீங்கள் தனிமனிதர் எனவே அவர்கள் உங்களைச் சட்டத்தின் முன்நிறுத்தி இலகுவாகக் குற்றவாளியாக்க முற்படுவார்கள்.

இப்படி நீங்கள் குற்றவாளியாக்கப்பட்டால்,

1. உங்கள் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம்.

2. அபராதமாகக் குற்றப்பணம் செலுத்தப்பட வேண்டிவரலாம்.

3. சிறைத்தண்டனை வழங்கப்படலாம்.

4. மேலதிக செலவுத்தொகை செலுத்தவேண்டிவரலாம்.

5. குற்றவியல் பத்திரத்தில் பதிவுசெய்யப்படலாம்.

6. சமுதாயத்தில் மேலும் பல சிக்கல்களை எதிர்நிக்கவரலாம்.

7. சுவிஸ் நாட்டு களவுச்சீட்டு இல்லை எனில், சுவிஸ் நாட்டை விட்டு வெழியேற்றபட வாய்ப்புகள் உண்டு.

இது பிரதி ஞாயிறுதோறும் இரவில் நடைபெறும் தொலைக்காட்சி நிகழ்சியில் நடப்பதுபோன்று, எப்போதும் உண்மையான குற்றவாளி தண்டிக்கப்படுவதில்லை.

குற்றவிசாரணைகள் மேலோட்டமாகப் பார்க்கும்போது இலகுவானது. ஆனால் அது உண்மையில், மிகவும் சிக்கலானது. அதை வெறுமனே அறிந்திருத்தல் மட்டும் போதுமானதல்ல. இவை வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானவை. இத்தகவல் இதழில் சுருக்கமாக என்ன பிரச்சனைகள் உங்களுக்கு வரலாம் அப்படி வந்தால் எவற்றில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் போன்ற விளக்கங்களுண்டு.மேலதிக விளக்கம்: „Strafuntersuchung„ என்ற புத்தகத்திலுண்டு. உங்களுக்கு எவ்வகையான உரிமைகளுண்டு என்று முதலில் தெரியவேண்டும். அது தெரிந்தால்தான் நீங்கள் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க முடியும்.

## நான் இதற்குப் பதில்சொல்லமாட்டேன் என்று கூறலாம்.உடனடியாகப்பதில் சொல்லாமல் விடுவதால் ஏற்படும் நன்மைகள்:

காவற்துறையினருக்கு உங்கள் மீது ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் விசாரிக்கத் தொடங்குவார்கள். குற்றவியல் விசாரணைக்கு முற்படுவார்கள். ஒரு தனிநபரோ அதிகாரிகளோ உங்கள் மீது புகார் தெரிவிக்கலாம். அப்படிப் புகார் தெரிவித்தால் பெரும்பாலும் அதிகாரிகள் உங்களை அழைப்பார்கள் அல்லது நேரடியாக வந்து கைது செய்வார்கள். அவ்வேளையில் உங்கள் மீது குற்றவிசாரணை ஆரம்பமாகும். உங்களது குற்றம் நிரூபிக்கப்படும் வரை நீங்கள் நிரபராதிகள்.

### <u>அறிவிப்பு</u>

உங்களுக்குப் பலவிதமான சட்டஉரிமைகள் உண்டு. அதில் முக்கியமானதொன்று பதிலளிக்காமல் இருத்தல். இது உங்களுக்கு நீதி

கிடைக்க உதவியாக இருக்கும். நீங்கள் உடனடியாகப் பதில் கூறாவிட்டால் அவர்களால் உங்கள் மீது குற்றத்தை உடனடியாக நிரூபிக்கமுடியாது.

„பதிலளிக்கமாட்டேன்„ என்பதன் பொருள் கருத்துக் கூற விருப்பமில்லை. அப்படி என்றால்: நீங்கள் <<ஆம்>> என்றும் <<இல்லை>> என்றும் பதில ளிக்கக்கூடாது. நீங்கள் <<வாக்குமூலம் தரமுடியாது>> அல்லது <<நான் ஒன்றும் கூறமாட்டேன்>> எனறே கூறவேண்டும்.

அதற்கு மாறாக ஆம் அல்லது இல்லை அல்லது எனக்குத்தெரியாது நினைவில்லை என்று கூறினால் பின்னர் இக்கருத்துக்களை வைத்து உங்களுக்குத் தீங்கு வரலாம்.

நீங்கள் கருத்துக் கூறமாட்டேன் என்பது மிகவும் கடினம். இதில் உறுதியாக இருப்பதும் மிகமிகக் கடினம். ஏனென்றால் மேலதிகாரிகள் பலவிதமாகச் சுற்றிவளைத்து உங்களைக் கேள்விகள் கேட்பார்கள். பலவித அழுத்தங்களைப் பிரயோகிப்பார்கள். இறுதியில் உங்கள் கருத்தைப் பெறமுனைவார்கள்.

பொய் சொல்லுவதால் பொதுவாகத் தீங்கு வராது. ஆனால் அதேவேளையில் ஒரு குற்றமற்றவரைக் காட்டிக்கொடுத்தால் அது உங்களுக்குப் பெரிய தீங்கை ஏற்படுத்தும். ஆனால் நீங்கள் பொய் கூறினால் அவர்கள் இலகுவாகக் கண்டுபிடுத்து விடுவார்கள்.

நீங்கள் கூறுவதெல்லாம் நீதிமன்றத்தில் விபரமாக இருக்கும். விசாரணையின் ஆரம்பத்தில் அவர்கள் எப்படியான ஆதாரங்களை வைத்திருக்கிறார்களென்று உங்களுக்குத் தெரியாது. உதாரணமாக DNA மாதிரிகள், காணொளி (Video)

கண்காணிப்பு, தொலைபேசிக்கண்காணிப்பு போன்றனவற்றை அவர்கள் வைத்திருக்கக்கலாம். எனவே பொய் சொல்லுவது இயலாத காரியம். காரணம் நிறைய ஆதாரங்களை அவர்கள் வைத்திருந்தால் பல முரண்பாடுகள் வரும். மேலதிகாரிகள் மிகவும் அனுபவமுடையவர்கள் இலகுவாக உண்மையைக் கண்டுபிடித்து விடுவார்கள்.

## எனது வழக்கறிஞர் இல்லாத போது நான் எதுவும் கூறமாட்டேன் என்று நீங்கள் கூறுவது ஒருபோதும் தவறில்லை.

உங்களுக்கு அழைப்பாணையொன்று வந்தால் உடனடியாக வழக்கறிஞரிடம் ஆலோசனை பெறவேண்டும். ஒரு வழக்கறிஞர் தேவைப்படுகின்றாரா? நீங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று அறிவதற்காகும். உங்களைக் கைது செய்தால் நீங்கள் அவர்களிடம் நான் ஒன்றும் கூறமாட்டேன் எனக்கு ஒரு வழக்கறிஞர் வேண்டுமென்று (Anwalt der ersten Stunde) உங்களுக்கு நம்பிக்கையான வழக்கறிஞறின் பெயரைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் ஆரம்பத்தில் நடைபெறுவது யாவும் மிகமுக்கியமானவை. எனவே ஆரம்பத்திலேயே ஒரு சட்டவல்லுனர் ஒருவரின் உதவியை பெறுதல் அவசியமாகும்.

### <u>அறிவிப்பு</u>

உங்களுக்கு உரிமைகள் உண்டு! நீங்கள் பதில் கூறாமலிருப்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. ஆரம்பத்திலிருந்து ஒரு வழக்கறிஞர் மூலம் வாதிடலாம். உங்களது வழக்கறிஞர் சட்டத்திற்குட்பட்டு உங்களுக்குச் சாதகமாகவே எப்போதும் செயற்படுவார். உங்களது வழக்கறிஞறின் கடமையும் நோக்கமும் உங்களை மட்டும் பாதுகாப்பதாகும். வழக்கறிஞர்களின் இரகசியக் காப்புறுதிப்படி நீங்கள் அவரை நம்பி எல்லா உண்மைகளையும் நிபந்தனையின்றிக் கூறலாம்.

Zürcher Rechtsauskunft Anwaltskollektiv (www.anwaltskollektiv.ch) மேற்கூறிய இடத்தில் நீங்கள் சென்று கதைப்பதற்கு முதல் அரை மணிநேரத்திற்கு CHF 60 அறவிடப்படும். கீழ் குறிப்பிட்ட இணையத்தில் எல்லா வழக்கறிஞர்களின் விபரத்தையும் பெறமுடியும். www.strafuntersuchung.ch எல்லா மாநிலத்திலும் உடனடிச் சட்ட நிறுவனமுண்டு. அவர்களின் விலாசம் புத்தகத்தின் பின்னிணைப்பில் அல்லது இணையத்தில் காணப்படும். நீங்கள் விரும்பினால் அந்த விலாசத்திலுள்ள வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளமுடியும். இதற்குரிய கட்டணத்தை முதலாவது சந்திப்பில் நேரடியாகக் கலந்துரையாடி முடிவு செய்து கொள்ள முடியும்.

## அறிவிப்பு

சில சந்தர்ப்பங்களில் நீங்கள் கட்டாயம் ஒரு வழக்கறிஞரைத் தெரிவு செய்துகொள்ள வேண்டும். நீங்கள் விளக்கமறியலிலுள்ளபோது கடும்தண்டனை வரக் கூடும் எனக்கருதினாலும், அல்லது மேலதிக விசாரணைக்கு உட்படுத்தினாலும் மிக அவசியம்.

தீர்ப்பின் அடிப்படையில் நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய அபாயம் இருந்தால், அல்லது உங்களின் கருத்தைத்தெரிவிக்க முடியாவிட்டால் இவ்வேளையில் வழக்கறிஞர்களுடைய செலவைக் கொடுக்க முடியாவிட்டால் நீங்கள் அரசசட்டத்தரணியை நாடலாம் (Amtliche Verteidigung) இதன் கருத்து செலவை அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும். இவர்களும் உங்களின் நன்மை கருதி மட்டுமே செயற்படுவார்கள். உங்களது பணவருவாய் குறைவான சந்தர்ப்பங்களிலும் அரசசட்டத்தரணியை நாடமுடியும். அரச சட்டத்தரணியை வைக்கமுடியுமா என வழக்கறிஞரிடமே கேட்கமுடியும் நீங்களே உங்கள் அரச சட்டதரணியை தெரிவுசெய்ய முடியும்.

## உங்களின் எதிரி யார்?

1. காவற்துறையினர்
2. அரசவழக்கறிஞர்

ஆரம்பத்தில் காவற்துறையுடனும் அரசசட்டதரணியுடனும் அதிகமாக உரையாடுவீர்கள். இவர்களின் நோக்கம் உண்மையைக் கண்டறிவதேயாகும். இவர்கள் சாதக பாதகமான யாவற்றையும் தேடுவார்கள். காவற்துறையும் அரசசட்டத்தரணியும் உங்களை ஒரு குற்றவாளியாகவே கருதுவார்கள். ஆனால் நீங்கள் நிரபராதியென நிரூபிக்க ஒரு வழக்கறிஞர் நிச்சயமாகத் தேவைப்படும்.

## முக்கியமான குறிப்பு

நீங்கள் ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்யாவிடில் உங்களோடு தொடர்பு கொள்ளும் காவற்துறையினரின் பெயரையும் உங்களோடு என்ன கதைத்தார்கள் என்ற விபரத்தையும் குறித்து வைக்க வேண்டும்.

## விசாரணை எவ்வாறு நடைபெறுகின்றது?

காவற்துறையும் அரசசட்டத்தரணியும் ஆரம்பத்தில் உங்களை விளக்கமறியலில் வைப்பார்கள். நான்கு நாட்களின் பின் (Zwangsmassnahmengericht) ஒரு நீதிமன்றம் இது சரியா தவறாவென முடிவெடுக்கும். நீதிமன்றத்தில் அரசசட்டதரணியின் நேரடிக்கேள்விகளுக்கு நீங்கள் கட்டாயம் பதிலளிக்கவேண்டும். விளக்கமறியலில் இருக்கும்போதே எந்த நேரத்திலும் விளக்கமறியலில் இருந்து விடுவிக்குமாறு கேட்கமுடியும். இது எப்போது தேவையென்பதை உங்களது வழக்கறிஞருடன் கலந்துரயாடி முடிவுசெய்யலாம்.

விளக்கமறியலின் பின்னராக என்ன நடைபெறலாம்? விசாரணைகள் பொதுவாக அரசசட்டதரணிகள் மூலம் கீழ்காணும் வாரே முடிவுசெய்யப்படும்:

1. எந்தவித சந்தேகமும் இல்லாதுவிட்டால் விசாரணை உடனடியாக நிறுத்தப்படும். நடவடிக்கை மேற்கொள்ள ஒருவரது முறையீடு தேவைப்படும் குற்றங்களில், எவரது முறையீடும் இல்லாதுவிட்டால் அரசசட்டதரணிகள் நடவடிக்கை எடுக்கமட்டார்கள். வாதியும் பிரதிவாதியும் தமக்குள் பேச்சுவார்த்தைமூலம் ஒருவருக்கொருவர் சமாதானமாகினால் முறையீட்டை விலக்கிக் கொள்ளலாம்.

2. அரசசட்டத்தரணியால் குற்றப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படும்.

3. வாதியும் பிரதிவாதியும் சமாதானமாகப் போகும்போது அல்லது அது போன்ற சந்தர்ப்பங்களில் ஆறுமாதத்துக்குறைந்த சிறைத்தண்டனை அல்லது அதற்கீடான பணத்தண்டனை அரசசட்டத்தரணியால் இதுபோன்ற தண்டனைகள் வழங்கமுடியும். இத்தீர்ப்புக்கு எதிராகப் பத்துநாட்களுக்குள் மறுப்புத்தெரிவிக்கமுடியும். அதன் பின்மீண்டும் அவர்கள் ஆராயத்தொடங்கலாம். மீண்டும் அரசசட்டத்தரணி இவ்வழக்கை முடிக்கலாம். அல்லது நீதிமன்றத்துக்கு அனுப்பலாம். அல்லது சிறிய தண்டனை வழங்கலாம்.

## அறிவித்தல்

முன்னறிவித்தலின்றி தகுந்த காரணங்களுமின்றி விசாரணைக்குச் சமூகமளிக்காவிடின் உங்கள் மறுப்பு நிராகரிக்கப்படும்.

## முக்கிய கவனம் செலுத்தவேண்டியவைகள் சாட்சிகளும் அதன் மதிப்பீடுகளும்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் உங்களது கூற்றுகளும் மற்றவர்களின் கூற்றுகளும் முக்கியமானவை. உதாரணமாக சாட்சிகளின் கூற்றுகளுமாகும், சாட்சிகளின் வாக்குமூலமும். எனவே முதல் அறிக்கையைத் தெளிவாக வாசிக்க வேண்டும். அதாவது முரண்பாடுகளைத்

தவிர்க்க வேண்டும். இது போன்ற வேறு சாட்சிகள்
- நிபுணத்துவச் சான்றுகள்
- தொலைபேசி ஆய்வுகள்
- DNA ஆதாரம்
- வீடியோ ஆதாரம்
- கணனி ஆதாரம்
- வீட்டில் ஆய்வு செய்தல்

மேற்கூறிய ஆதாரங்களையும் உங்களது கூற்றுக்களையும் வைத்துக் கொண்டு அரசசட்டதரணிகள் பொய்களை இலகுவாகக் கண்டுபிடித்து விடுவார்கள். ஆகவே மௌனமாக இருப்பதே நல்லது. ஏனென்றால் ஒரு சிறிய பொய்கூட உங்கள் மீதான நம்பகத்தன்மையைக் குறைக்கும்.

## மேற்கூறிய நடைமுறை எப்போது முடிவடையும், இம்முடிவு எப்போதும் சந்தோசமாக இருக்குமென்றும் கருதமுடியாது.

பொதுவாக நீதிமன்றம் தனது தீர்ப்பில் நீங்கள் குற்றவாளியா? அல்லது நிரபராதியா? எனக் கூறும். விதிவிலக்காக அரசசட்டதரணியும் தீர்ப்பு வழங்கமுடியும். இப்படியான சந்தர்ப்பத்தில் நீங்கள் ஒரு வழக்கறிஞரை

வைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இலகுவாகக் கலந்துரயாடி சிறந்த தீர்ப்பைப் பெறலாம். இந்த நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக வாதி அல்லது பிரதிவாதி மீண்டும் மாவட்டநீதிமன்றம்

செல்லமுடியும். அவர்கள் வழங்கும் தீர்ப்புக்கும் எதிராக மீண்டும் கூட்டாட்சி நீதிமன்றம் செல்லலாம். கூட்டாட்சி நீதிமன்றம் முக்கிய கூறுகளை மட்டும் ஆராய்ந்து இறுதிமுடிவையெடுக்கும்.

## தண்டனையும் வேறு நடவடிக்கைகளும்

தண்டனைகள் பலவகைப்படும். அவை சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டனை ஆகும். பணத்தண்டனை தவிர்ந்த ஏனைய தண்டனைகளின்போது 2 முதல் 5 வருடங்கள் வருடங்கள் செல்லும் காலகட்டத்தில் குற்றம் செய்யாது இறுந்தால், பிணையில் வெளியில் வரலாம். சிறைத்தண்டனை 2 வருடங்களுக்குக் குறைவானதாயின் மட்டுமே முற்றிலுமாகப் பிணையில் வெளியில் வரலாம். இல்லாவிட்டால் குறிப்பிட்ட காலப்பகுதியாக மட்டும் பிணையில் வரலாம். பிணை வழங்கிய நேரத்தில் தண்டனையை அனுபவிக்கத் தேவையில்லை. பணத்தண்டனையின் அளவு உங்கள் குற்றத்தின் அளவிலும், உங்களது தனிப்பட்ட வருமானத்தினளவிலும் தங்கியுள்ளது. சிறைத்தண்டனை அரை வருடத்தைவிடக் குறைவாக இருக்குமாயின் பணத்தண்டனை வழங்கப்படும். இதைவிடக்குறைவான சிறைத்தண்டனை வழங்கினால் அரைவாசிச் சிறைத்தண்டனையை வாங்க முடியும் அல்லது சமூகநலவேலைத்தண்டனை வழங்க முடியும் அல்லது கணணி ஊடான கண்காணிப்பை மேற்கொள்ளலாம். தண்டனைக்குப் பதிலாக நீதிமன்றம் பின்வருவனவற்றையும் வழங்கலாம்.

- சிகிச்சை Behandlung
- காவலில் வைக்கப்படுவீர்கள் Verwahrung
- மிகமுக்கியமாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடலாம் ஆனால் இது கடுமையான குற்றங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இத்துடன் பாதுகாப்புக் கருதி குறித்தகால இடைவெளியில் இத்தீர்ப்பினை மறுபரிசீலனை செய்வார்கள்.

போதை மருந்துக்கு அடிமையாதலைத் தவிர்த்தல், மனக்குழப்பத்தை நீக்குதல் போன்ற சிகிச்சை நடவடிக்கைகளுக்கு நீண்ட நாட்கள் எடுக்கும். இது உங்களின் சுதந்திரத்தைப் பாதிக்கும். கடினமான நிலமைகளில் குறித்த நிலையங்களில் சிகிச்சை பெறவேண்டும். மென்மையான சந்தர்ப்பங்களில் நிலையங்களுக்குச் செல்லாமலே

சிகிச்சை பெறலாம். உதாரணமாக வாகனம் ஓட்டுதலைத்தவிர்த்தல், வேலைசெய்வதைத் தவிர்த்தல், வெளிநாட்டவருக்கு வதிவிட அனுமதிமறுத்தல் போன்றவையாகும்.

குற்றவியல் நீதிமன்றத்தில் Oktober 1ம் திகதிக்குப்பின் செய்த பாரிய குற்றங்களுக்குத் தண்டனையாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டளையிடப்படலாம்.Oktober 1ம் திகதிக்கு முன்னதாகச் செய்த பாரிய குற்றங்களுக்குத் தீர்ப்பு வழங்கிய பின் குடிவரவு, குடியகல்வுத்திணைக்களம் நாட்டை விட்டு வெளியேற்றுவது குறித்து முடிவுசெய்யும். குறிப்பாக வெளிநாட்டவர்கள் தாமதமின்றி நாட்டை விட்டு வெளியேற்றுவது பற்றிய சட்டமறிந்த வக்கீலுடன் தொடர்பு கொண்டு வெளியேறுவது தொடர்பான கேள்விகளோடு சந்தேகங்களையும் கதைத்தும் கேட்டும் அறிந்துகொள்ள வேண்டும்.

**<u>நீங்கள் முக்கியமாக அறிய வேண்டியவைகள் எவை?</u>**

உங்களின் உரிமைகளைத் தெரிந்திருத்தல். பலவழிகளிலும் அரசு உங்கள்மீது குற்றத்தைச் சுமத்த முயற்சிக்கும். அதற்கு நீங்கள் போதிய நேர அவகாசம் பெற்று அனுபவமுள்ள வக்கீலின் உதவியை நாடினாற்தான் தகுந்த தந்திரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு சிக்கல்களிலிருந்து மீளலாம்.

**<u>அறிவிப்பு</u>**

இத்தகவல் இதழில் உங்களுக்குத் தேவையான மிகமுக்கியமானவைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகமான தகவல்களை Strafuntersuchung - was tun? எனும் முகவரிப் புத்தகத்தில் பெறலாம்.

www.strafuntersuchung.ch
www.anwaltskollektiv.ch

அல்லது ஏதாவது புத்தகக்கடைகளில் பெறலாம். இதன் விலை CHF 25 ஆகும். இப்புத்தகத்தில் பின்வருவனபற்றி விளக்கப்பட்டுள்ளது.

1. குற்றப்புலனாய்வுமுறை
2. காவற்துறையின் செயற்பாடுகள்
3. நீதிமன்ற நடைமுறைகள்
4. உயர் அதிகாரிகளின் எல்லை
5. சாட்சிகளை எவ்வாறு கௌரவித்தல்
6. தண்டனைகளை நிர்ணயித்தல்
7. அதிமுக்கியமாக உங்கள் உரிமை மற்றும் பாதுகாப்புப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

உங்களுக்குச் சிறந்த தனிப்பட்ட ஆலோசனைகள் தேவைப்பட்டால் பின்வரும் முகவரியிலுள்ள எமது சட்ட ஆலோசனைநிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம். இதற்கு 30 நிமிடங்களுக்கு CHF 70 அறவிடப்படும்.

<u>**முகவரி:**</u>

Rechtsauskunft Anwaltskollektiv, Kernstrasse 8, 8004 Zürich, Tel. 044 241 24 33

எல்லா வேலைநாட்களிலும் முன்னறிவித்தலின்றி 12.30 மணி முதல் 18.30 மணிவரை நேரடியாக வரலாம். பொதுவாக டொச்மொழியில் ஆலோசனை வழங்கப்படும். பிரெஞ், இத்தாலி, ஆங்கிலம், ஸ்பானிஸ் ஆகியமொழியறிந்த வழக்கறிஞர்களுமுண்டு. மேலும் வேறுமொழிகளில் ஆலோசனை தேவைப்படின் அதற்குரிய மொழிபெயர்ப்பாளருடன் எம்மிடம் வருகைதரவேண்டும்.

இந்த இணையத்தளத்தில் (www.strafuntersuchung.ch) எங்களது எல்லாச் சட்டத்தரணிகளின் விபரங்களும் உள்ளன. இத்துடன் இப்புத்தகத்தில் Strafuntersuchung - was tun? அல்லது இணையத்தளத்தில் மாவட்டங்களின் **உள்ளூர்** உடனடி வழக்கறிஞர்களின் விபரங்களும் உள்ளது. இதன்மூலம் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.